

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.7.2024) திருவள்ளூர் மாவட்டம், கீழச்சேரி, புனித அன்னாள் தொடக்கப் பள்ளியில், ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்து அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் 1 முதல் 5–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை விரிவுபடுத்தி தொடங்கி வைத்து, மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்படும் உணவின் தரத்தினை ஆய்வு செய்தார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.7.2024) திருவள்ளூர் மாவட்டம், கீழச்சேரி, புனித அன்னாள் தொடக்கப் பள்ளியில் நடைபெற்ற விழாவில், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்து அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் 1 முதல் 5–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு விரிவுபடுத்தி தொடங்கி வைத்து, மாணவ, மாணவியர்களுடன் உணவருந்தி, அவர்களுடன் உரையாடினார்.

# கல்வியை மாநில பட்டியலுக்கு மாற்ற ஒன்றிய அரசு தயாரா?

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!...

முதல் பக்கத் தொடர்ச்சி

“அரசாங்கத்திற்கு எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை, ஒரு குழந்தை கூட பசியோட ஸ்கூல்ல தவிக்க கூடாது” என்று இந்தத் திட்டத்தை தொடங்க உத்தரவிட்டேன்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால், பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளில் இந்தத் திட்டத்தைத் தொடங்கினேன். இன்றைக்கு பெருந்தலைவர் காமராசரின் பிறந்தநாளில் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தியிருக்கிறேன்.

“அரசுப் பள்ளி மாணவர்களுக்கு மட்டும்தானா? எங்களுக்கு இல்லையா?” என்று அரசு உதவி பெறும் பள்ளி மாணவ, மாணவியர் கேட்டார்கள்... அதனால்தான், கிட்டத்தட்ட 18 லட்சத்து 50 ஆயிரம் அரசுப் பள்ளி மாணவ, மாணவியர் வயிறார சாப்பிடக் காரணமான இந்த திட்டத்தை இன்றைக்கு விரிவுபடுத்தியிருக்கிறேன்.

**20.73 லட்சம் பேருக்கு காலை உணவுத்திட்டம்!**

இனிமேல், அரசு உதவி பெறும் பள்ளிகளைச் சேர்ந்த இரண்டு லட்சத்து 23 ஆயிரத்துக்கும் அதிகமான மாணவர்கள் காலை உணவு சாப்பிட இருக்கிறார்கள். மொத்தமாக சொல்லவேண்டும் என்றால், நாள்தோறும் 20 லட்சத்து 73 ஆயிரத்துக்கும் அதிகமான குழந்தைகள் சத்தான - சுவையான காலை உணவை சாப்பிடுகிறார்கள்.

புறநானூறு, திருக்குறள், மணிமேகலை என்று நம்முடைய இலக்கியங்கள் மட்டுமில்லை. அவ்வையார், வள்ளலார் போன்ற சான்றோர்களும் பசிப்பிணியைப் போக்குவதை பற்றி, உயர்வாக சொல்லியிருக்கிறார்கள்!

சங்க காலத்தைச் சேர்ந்த ஒரு குறுநில மன்னர், ஏழை எளியோருடைய பசியை போக்கியதால், ‘பசிப்பிணி மருத்துவன்’ என்று போற்றப்படுகிறார். பசிப்பிணிப் போக்கும் பணி - அரசுக்கும் பொருந்தும்! ஏழை எளிய மாணவர்களுக்கு உணவு அளிப்பது மூலமாக, குழந்தைகளை நலமான, வளமான அறிவுமிக்க சமூகமாக வளர்த்தெடுக்கிறோம்! ஏனென்றால், குழந்தைகள்தான் தமிழ்நாட்டின் எதிர்கால சொத்து! அதனால்தான், காலை உணவுத் திட்ட ஒதுக்கீடு பற்றி, அதிகாரிகள் என்னுடன் விவாதித்தபோது, “அதை நிதி ஒதுக்கீடு என்று சொல்லாதீர்கள், வருங்கால தலைமுறையை உருவாக்குகிற முதலீடு என்று சொல்லுங்கள்” என்று ஆணித்தரமாக சொன்னேன்.

> **நா**ள்தோறும் மக்களுக்கான நலத்திட்டங்கள், தமிழ்நாட்டின் எதிர்கால முன்னேற்றத்திற்கு தேவையான செயல்பாடுகள் என்று நாங்கள் தொடர்ந்து செய்து கொண்டு, இயங்கிக்கொண்டு தான் இருக்கிறோம். பொய்ச் செய்திகள் மூலம் ஒரு சில கருத்துருவாக்கங்களை உருவாக்கி, அதில் குளிர் காயலாம் என்று நினைக்கின்ற அந்த மக்கள் விரோத சக்திகளுடைய அஜெண்டா எந்த காலத்திலும் நடக்காது. ஏனென்றால், ஒவ்வொரு குடும்பமும் பயன்பெறக்கூடிய வகையில் மக்கள் நலத் திட்டங்களைப் பார்த்து பார்த்து செயல்படுத்திக் கொண்டு இருக்கிறோம்!

ஆனால், இந்தத் திட்டம் மாணவ - மாணவியருக்கு தன்னம்பிக்கையை

## உணவின் தரம் துளியும் குறையக் கூடாது!

அளிக்கின்றது. பெற்றோர்களுக்கு பொருளாதாரச் சுமையை குறைக்கின்றது. பள்ளிகளுக்கு வரும் மாணவர்களுடைய எண்ணிக்கையை அதிகரிக்கின்றது. இடைநிற்றலை குறைக்கின்றது!

இதுபோல, ஏராளமான நன்மைகள் காலை உணவுத் திட்டத்தால் விளையுது! சிறிது நாளுக்கு முன்னால், ஒரு பெண் அளித்திருந்த பேட்டியை பார்த்தேன்... டிவியில் பார்த்தேன், வாட்ஸ் ஆப்பிலும் பார்த்தேன். அதில், “காலை உணவுத் திட்டம் ஏழை எளிய குடும்பங்களுக்கு மட்டுமில்லை, பெற்றோர் இரண்டு பேருமே வேலைக்குப் போகின்ற மிடில் கிளாஸ் குடும்பங்களுக்கும் பயனுள்ளதாக இருக்கிறது” என்று பேட்டி கொடுத்திருந்தார்கள்.

இதுபோல, நம்முடைய திராவிட மாடல் அரசு கொண்டு வருகின்ற ஒவ்வொரு திட்டத்தையும் பத்திரிக்கைகள் பாராட்டுகின்றதோ இல்லையோ, பயன்பெறுகிற மக்கள் பாராட்டிக் கொண்டுதான் இருக்கிறார்கள்!

இல்லாத கற்பனைக் கதைகளுக்கு வடிவம் கொடுப்பதையும், ஈரைப் பேனாக்கும் வேலையைச் செய்பவர்களுக்கும் நம்மைப் பாராட்டுவதற்கு மனமில்லை! அதைபற்றி நமக்கு கவலையுமில்லை!

## திடீர், திடீரென்று ஆய்வுகளை மேற்கொள்வீர்!

எந்தவொரு சிறு பிரச்சினை நடந்தாலும் - நம்முடைய அரசு உடனடியாக அதை கவனத்தில் எடுத்து, அதை தீர்த்து வைக்கின்றது! எந்த விவகாரத்திலாவது நம்முடைய அரசு செயல்படாமல் தேங்கி நின்றிருக்கிறதா? இல்லை!

**மக்கள் விரோத சக்திகளின் ‘அஜெண்டா’ எப்போதும் நடக்காது!**

நாள்தோறும் மக்களுக்கான நலத் திட்டங்கள், தமிழ்நாட்டின் எதிர்கால முன்னேற்றத்திற்கு தேவையான செயல்பாடுகள் என்று நாங்கள் தொடர்ந்து செய்து கொண்டு, இயங்கிக்கொண்டு தான் இருக்கிறோம். பொய்ச் செய்திகள் மூலம் ஒரு சில கருத்துருவாக்கங்களை உருவாக்கி, அதில் குளிர் காயலாம் என்று நினைக்கின்ற அந்த மக்கள் விரோத சக்திகளுடைய அஜெண்டா எந்த காலத்திலும் நடக்காது. ஏனென்றால், ஒவ்வொரு குடும்பமும் பயன்பெறக்கூடிய வகையில் மக்கள் நலத் திட்டங்களைப் பார்த்து பார்த்து செயல்படுத்திக் கொண்டு இருக்கிறோம்!

குறிப்பாக, இந்த காலை உணவுத் திட்டம் நம்முடைய திராவிட மாடல் அரசுக்கு நீடித்த புகழைத் தேடித் தந்திருக்கிறது!

நாம் தொடங்கிய பின்பு, இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில், ஏன் கனடா போன்ற நாடுகளிலும் தொடங்கப்பட்டிருக்கிறது. இந்த நேரத்தில் அமைச்சர்களையும், அதிகாரிகளையும், சட்டமன்ற உறுப்பினர்களையும், நாடாளுமன்ற உறுப்பினர்களையும் நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, “எந்த ஊரிலும் - எந்த ஸ்கூலிலும் - உணவின் தரம் ஒரு துளிகூட குறையக் கூடாது!

உங்கள் குழந்தைகள் சாப்பிடுகிற சாப்பாட்டை எப்படி கவனமாக பார்த்துக் கொள்வீர்களோ அதுபோல, அரசு பள்ளி மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி மாணவர்களுடைய சாப்பாட்டையும் கவனமாக ’ஸ்பெஷல் கேர்’ எடுத்து பாருங்கள். நான் ஆய்வுக்கு வெளியூர் போகும் போதெல்லாம், ஏதாவது ஒரு ஸ்கூலுக்கு திடீர் என்று போகிறேன். அங்கே இருக்கின்ற பிள்ளைகளுடன் பேசுகிறேன். காலை உணவு எப்படி இருக்கும் என்று பார்க்கிறேன். அந்த உணவை நானே சாப்பிட்டும் பார்க்கிறேன்.

அமைச்சர் தம்பி உதயநிதிகூட சுற்றுப்பயணம் போகிறபோது, நிகழ்ச்சிக்குப் போகிறபோது இதுபோல ஆய்வு செய்வதை பார்க்கிறேன். மற்ற அமைச்சர்களும், மக்கள் பிரதிநிதிகளும் மாவட்ட ஆட்சியர்களும், அதிகாரிகளும் அவரவர்கள் பகுதிகளில் இருக்கின்ற பள்ளியில் இப்படி திடீர், திடீரென்று ஆய்வுகளை மேற்கொள்ளவேண்டும் என்று மிகவும் பணிவோடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

**எந்தத் தடைகளையும் உடைப்பதே முதல் பணி!**

திராவிட மாடல் அரசையும், என்னையும் பொருத்தவரைக்கும் நம்முடைய தமிழ்நாட்டு பசங்க படிப்பதற்கு எதுவும் தடையாக இருக்க கூடாது என்று நினைக்கிறோம். அது பசியாக இருந்தாலும் சரி, நீட் தேர்வாக இருந்தாலும் சரி, ஒன்றிய அரசின் புதிய கல்விக் கொள்கையாக இருந்தாலும் சரி, எந்தத் தடை வந்தாலும் அந்த தடைகளை உடைப்பதுதான் எங்களுடைய முதல் பணி!

நீட் தேர்வை நாம் எதிர்க்க தொடங்கியபோது ஏன் எதிர்க்கிறீர்கள் என்று சிலர் எதிர்கேள்வியை கேட்டார்கள். ஆனால், இன்றைக்கு நீட் தேர்வில் நடக்கின்ற முறைகேடுகளை பார்த்து, உச்சநீதிமன்றம் கேள்வி கேட்கின்றது. மாணவர் சமுதாயம் போர்க்கொடி தூக்கு கின்றது. பல முதலமைச்சர்கள், தேசிய தலைவர்கள் நீட் வேண்டாம் என்று குரல் கொடுக்க ஆரம்பித்துவிட்டார்கள். ஏன்? ஒட்டுமொத்த இந்தியாவும் தமிழ்நாட்டு வழியில், நீட் தேர்வை எதிர்க்கின்றது!

ஒன்றிய பா.ஜ.க. அரசு அரசியலுக்காக இப்போது, நெருக்கடி நிலையை பற்றி நாடாளுமன்றத்தில் தொடர்ந்து பேசுகிறார்கள். ஆனால், நாம் அவர்களிடம் கேட்கின்ற கேள்வி நெருக்கடி நிலை காலத்தில், ஒத்திசைவுப் பட்டியலுக்கு மாற்றப்பட்ட கல்வியை உடனடியாக மாநிலப் பட்டியலுக்கு மாற்ற ஒன்றிய அரசு தயாராக இருக்கிறதா? இந்த ஆக்கபூர்வமான செயலை அவர்கள் செய்வார்களா?

**கல்வியில் கவனம் செலுத்துங்கள்!**

நம்மை பொறுத்தவரை, நீட் தேர்வு - புதிய கல்விக் கொள்கை தேவையற்றது. அதை எதிர்க்கிறோம். ஒருபக்கம் அரசியல் மற்றும் சட்டப் போராட்டங்களை நடத்துகிறோம். இன்னொரு பக்கம் மாணவர்களின் நலனுக்காக பள்ளிக்கல்விக்கும், கல்லூரிகளுக்கும், உயர்கல்விக்கும் ஏராளமான திட்டங்களை தீட்டுகிறோம். எனவே, “தடைகளை நாங்கள் உடைக்கிறோம். மாணவர்கள் கல்வியில் மட்டும் கவனம் செலுத்துங்கள். ஏனென்றால், நான் திரும்பவும் சொல்கிறேன், கல்வி தான் யாராலும் திருட முடியாத சொத்து, அந்த சொத்தை தமிழ்நாட்டு மாணவர்கள் பெற்றாகவேண்டும்.

மாணவச் செல்வங்களே! “படிங்க... படிங்க...படிங்க... நீங்கள் உயர படிங்க.. நீங்கள் உயர... உங்கள் வீடும் உயரும்! இந்த நாடும் உயரும்!” என்று உங்களையெல்லாம் மனதார வாழ்த்தி விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் விரிவாக்கம்! பிறந்தநாளில்

# காமராசருக்கு பெருமை சேர்த்தேன்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை, ஜூலை 16-

"காமராசர் அவர்களின் பிறந்த நாளில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை விரிவுபடுத்தி அவருக்குப் பெருமை சேர்த்தேன்" என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் பெருமையுடன் குறிப்பிட்டுள்ளார்.

பெருந்தலைவர் காமராசர் அவர்களின் 122 வது பிறந்தநாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**கல்விக் கண் திறந்த பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பிறந்தநாளில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை விரிவுபடுத்தி அவருக்குப் பெருமை சேர்த்தேன்!**

**மங்காப் புகழ்கொண்ட அவரது வாழ்வையும் தொண்டையும் கல்வி வளர்ச்சி நாளில் தமிழ்நாட்டு மாணவர்களுக்குப் பயிற்றுவிப்போம்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் கூறியுள்ளார்.

---

# சட்டமன்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!...

முதல் பக்கத் தொடர்ச்சி

இந்த நிலையில், இந்த ஆணைப்படி தமிழ்நாட்டிற்கு விடுவிக்க வேண்டிய நீரை விடுவிக்க இயலாது என்று கர்நாடக அரசு தெரிவித்து இருப்பது மிகுந்த அதிர்ச்சியை அளிக்கிறது. இந்த ஆணையை உடனடியாக செயல்படுத்திட தமிழ்நாடு அரசு CWMA அமைப்பிற்கு கடிதம் எழுதியுள்ளது. இவ்வாறு CWRC ஆணையின்படி நீரை விடுவிக்காத கர்நாடகத்தின் செயல் உச்சநீதிமன்றத்தின் ஆணையை மீறுவதாகும்.

**கர்நாடக அரசின் நடவடிக்கை கண்டிக்கத்தக்கது!**

இன்றைய அளவில் (15.07.2024) கர்நாடகாவின் 4 முக்கிய அணைகளின் நீர் இருப்பு 75.586 டி.எம்.சி. ஆகும். மேலும், IMD யின் அறிக்கையின்படி மழை சரியான அளவில் பெய்ய வாய்ப்புள்ளது. மேட்டூர் அணையில் வெறும் 13.808 டிஎம்சி அளவிற்கு மட்டுமே நீர் உள்ளது. இந்தச் சூழலில், CWRC அமைப்பின் ஆணையின்படி வரையறுக்கப்பட்டுள்ள நீரை கர்நாடகா தர மறுப்பது தமிழக விவசாயிகளை வஞ்சிக்கும் செயலாகும்.

இவ்வாறு, தமிழ்நாட்டிற்கு நீர் வழங்க முடியாது என்று கர்நாடக அரசு கூறுவது வன்மையாக கண்டிக்கத்தக்கது. தமிழக விவசாயிகளின் நலனை பாதிக்கக்கூடிய இத்தகைய செயல்களை தமிழ்நாடு அரசு ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாது. காவிரி நீரைப் பெறுவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களின் தலைமையில் அனைத்து சட்டமன்ற கட்சி தலைவர்களின் கூட்டத்தை நாளை (16.07.2024) காலை 11.00 மணிக்கு தலைமைச் செயலகத்தில் கூட்ட ஆணையிட்டுள்ளேன். இக்கூட்டத்தில் அனைவரையும் கலந்தாலோசித்து, சட்ட வல்லுநர்களின் கருத்துக்களைப் பெற்று, தமிழ்நாடு அரசு மேற்கொள்ள வேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து முடிவு செய்யப்படும்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

---

# விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.க. அமோக வெற்றி!

## தியாகதுருகத்தில் வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ. இனிப்பு வழங்கினார்!

*கள்ளக்குறிச்சி, ஜூலை 16-*

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தலில் திமுக 67,757 வாக்குகள் வித்தியாசத்தில் அமோக வெற்றி பெற்றது, அதனைக் கொண்டாடும் விதமாக கள்ளக்குறிச்சி மாவட்டம் தியாகதுருகம் பேருந்து நிலையம் முன்பு தெற்கு மாவட்ட கழக செயலாளர், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க. கார்த்திகேயன் தலைமையில் கழக நிர்வாகிகள், தொண்டர்கள் பட்டாசு வெடித்து பல்வேறு வாழ்த்து கோஷங்கள் எழுப்பி பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடினார்கள்.

மேலும் கடந்த மூன்று ஆண்டுகளில் நமது திராவிட மாடல் ஆட்சியில் மக்களுக்கு பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு முதல்வர், சமூக நீதி காவலர்,கழகத் தலைவர்,திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார், அவரது வழியில் கழக இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அதனை திறம்பட மக்களிடத்தில் கொண்டு சேர்ந்து வருகிறார், ஆகையால் நன்றி மறவாமல் விக்கிரவாண்டி தொகுதி வாக்காளர்கள் திமுக வேட்பாளர் அன்னியூர் சிவாவை வெற்றி பெற செய்துள்ளார்கள், மேலும் எதிர்க்கட்சிகள் பல்வேறு விமர்சனங்கள் முன் வைத்தாலும் அதனை சிறிதும் கண்டு கொள்ளாமல் வாக்காளர்கள் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களித்து உள்ளனர், இந்த வெற்றியானது வருகின்ற 2026 ஆம் ஆண்டு நடைபெற இருக்கும் சட்டமன்ற தேர்தலில் நமது திராவிட மாடல் அரசுக்கு மக்களின் ஆதரவு தொடர்ந்து இருப்பதை உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

இதில் கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் மலையரசன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் புவனேஸ்வரி பெருமாள், ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் தாமோதரன்,ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், அண்ணாதுரை பேரூராட்சி மன்ற தலைவர் வீராசாமி, துணைத்தலைவர் சங்கர், நகர துணை செயலாளர் அக்பர் உசேன்,பரசுராமன், ஒன்றிய கவுன்சிலர்கள், பேரூராட்சி வார்டு கவுன்சிலர்கள்,மாவட்ட ஒன்றிய, நகர,பேரூர் கழக நிர்வாகிகள் உள்பட பலர் உடன் கலந்து கொண்டனர்.



பெருந்தலைவர் காமராஜரின் 122வது பிறந்தநாளை முன்னிட்டு தூத்துக்குடி ஆரோக்கியபுரத்தில் உள்ள பள்ளியில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது உருவப்படத்திற்கு கனிமொழி கருணாநிதி எம்.பி மலர்தூவி மரியாதை செலுத்தினார். மாவட்டச் செயலாளர், அமைச்சர் கீதா ஜீவன், எம்.சி.சண்முகையா எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சியர் கோ.லட்சுமிபதி, மேயர் ஜெகன் பெரியசாமி, துணை மேயர் ஜெனிட்டா செல்வராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.